**<u>மாவட்ட உரிமையியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், சிங்கம்புணரி</u>**

**அசல் வழக்கு எண். 40 /2024 பி.வா.சா.3**

2026–ம் ஆண்டு மார்ச் திங்கள் 02–ம் நாள் திங்கள்கிழமை–ன் வாக்குமூலம் 1857 ம் ஆண்டு சட்டப்பிரிவு 10(1)(அ)ன் படி ஆணை உறுதி செய்துவைக்கப்பட்டது.

| | |
|---|---|
| பெயர்: மச்சக்காளை | தந்தை பெயர்: கண்ணு |
| ஊர்: | தாலுகா: |
| வயது: | தொழில்: |
| ஜாதி: | சமயம்: |

---

<u>02.03.2026:</u>

<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை:</u>

1. தாவாச் சொத்து இருக்கும் இடத்திற்கும் , நான் குடியிருக்கும் இடத்திற்கும் சுமார் 5 கி.மீட்டர் தொலைவில் இருக்கும். நான் விவசாய வேலைகளுக்காக உழவு மாடு வைத்துள்ளேன். எனக்கு 1 ஏக்கர் நிலம் உள்ளது . தாவாச் சொத்து புஞ்சை ஆகும் . தாவாச் சொத்து தரிசு நிலமாகும். தாவாச் சொத்தை சுமார் 30–35 வருடங்களாக நானும், எனக்கு முன்பாக எனது தகப்பானரும் உழுது வருகிறோம் . தாவாச் சொத்துள்ள ஒடுவன் பட்டி கிரமத்தில் உழுவதற்கு மாடுகள், டிராக்டர் உள்ளதா என்றால் உள்ளது.

2. தாவாச் சொத்தை யார் பெயரில் கிரையம் வாங்கினார்கள் என்று எனக்கு சொல்லவில்லை. தாவாச் சொத்திலுள்ள கிராமத்திற்கு சென்று உழுது கொடுப்பதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல . தாவாச் சொத்திற்கு பட்டா யார் பெயரில் உள்ளது என்று தெரியாது. நான் சொல்வது போல் பிரதிவாதி வகையறாவிற்கு தாவாச் சொத்து 30–35 வருடங்களாக சொந்தமல்ல என்றால் சரியல்ல . பிரதிவாதி கேட்டுக்கொண்டதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.